# ஊர்க்காவல்படை, கடலோர பாதுகாப்பு குழுமத்திற்கு ஆட்கள் தேர்வு

## இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

**கடலூர் மே 27:** கடலூர் மாவட்ட எஸ்பி சக்திகணேசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடலூர் மாவட்ட ஊர்க்காவல் படை மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமத்திற்கு ஆட்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. குறைந்தபட்சம் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஆண்கள் 167 சென்டிமீட்டர் உயரமும், பெண்கள் 157 சென்டிமீட்டர் உயரமும் இருக்க வேண்டும். எந்தவித குற்ற வழக்கில் ஈடுபடாமலும், சாதி, மத அரசியல் மற்றும் எந்தவித சங்கத்திலும் உறுப்பினராக இருக்க கூடாது.

விண்ணப்பங்களை கடலூரில் உள்ள ஊர்க்காவல்படை அலுவலகத்தில் இன்று(27ம் தேதி) முதல் வரும் 2ம் தேதி மாலை 5 மணிக்குள் பெற்று, பூர்த்தி செய்து உரிய ஆவணங்களை இணைத்து 3ம் தேதி மாலை 5 மணிக்குள் கடலூர் ஊர்க்காவல் படை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வண்டேும்.

கடலோர காவல் குழும பணிக்கு மீனவ இளைஞராக இருக்க வேண்டும். அதற்கு கடலூர் மாவட்ட மீன் வளத்துறை அதிகாரியிடமிருந்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். 20 வயது முதல் 30 வயது வரை இருக்க வண்டேும். கடலூர் மாவட்டத்தில் வசிப்பிடம் இருக்க வேண்டும் (இருப்பிட சான்று அவசியம்). கடலோர காவல் நிலையத்தின் எல்லை பகுதியில் இருந்து 20 கிலோ மீட்டர் சுற்றளவில் வசிக்க வேண்டும். நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் 1 அல்லது 2 கிலோ மீட்டர் கடல் மணலில் ஓட வேண்டும். ஊர்க்காவல்படை பணிக்கு, அரசு ஊழியராக இருப்பின், துறை அதிகாரியிடம் தடையில்லா சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும். 20 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும். கடலூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும், என தெரிவித்துள்ளார்.